பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

11 08 2024 **SUNDAY** **6.45 AM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு நரேந்திர மோடி, பருவநிலை மாற்றத்தை தாங்கி வளரக்கூடிய 109 நவீன பயிர் ரகங்களை புதுதில்லியில் இன்று வெளியிடுகிறார்.
- இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களை உடனடியாக விடுவிக்க மத்திய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.
- கீழ்பவானி பாசன வாய்க்காலில் மேற்கொள்ளப்பட்டுவரும் சீரமைப்புப்பணிகள் வரும் 15-ஆம் தேதிக்குள் முடிக்கப்பட்டு தண்ணீர் திறக்கப்படும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.
- தமிழகத்தில் தொழில் வளத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளில் மாநில அரசு உரிய கவனம் செலுத்த வேண்டும் என்று பிஜேபி வலியுறுத்தியுள்ளது.
- பாரிஸ் ஒலிம்பிக் விளையாட்டுப்போட்டிகள் இன்றுடன் நிறைவடைகின்றன

*-- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<<>>>>>**

பிரதமர் திரு நரேந்திர மோடி, பருவநிலை மாற்றத்தை தாங்கி வளரக்கூடிய 109 நவீன பயிர் ரகங்களை புதுதில்லியில் இன்று வெளியிடுகிறார்.

உயிரி தொழில்நுட்பத்தில் செறிவூட்டப்பட்டு அதிக மகசூல் அளிக்கும் வகையில் இந்த பயிர் ரகங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாக பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் அதிக மகசூல் தரும் 34 வகையான வயல்களில் சாகுபடி செய்யப்படும் பயிர் ரகங்களும், 27 தோட்டக்கலை பயிர் வகைகளும் அடங்கும்.

சிறுதானிய வகைகள், எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகைகள், கரும்பு, பருத்தி உள்ளிட்ட பயிர் ரகங்களும் இதில் அடங்கும்.

பழவகைகள், காய்கறிகள், பூக்கள், மருத்துவ குணம் நிறைந்த பயிர் வகைகள் மற்றும் வாசனை பயிர்கள் உள்ளிட்ட பயிர் வகைகளையும் பிரதமர் வெளியிடுவார் என அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், விவசாயிகள் மற்றும் வேளாண் விஞ்ஞானிகளுடன் பிரதமர் கலந்துரையாடுகிறார்.

<<<<<<>>>>>

வக்ஃபு வாரிய சட்டத்திருத்த மசோதாவை ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற கூட்டுக்குழு தனது அறிக்கையை மக்களவையின் குளிர்கால கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் தனது கருத்தை பதிவு செய்துள்ள அவர், இந்த சட்டத்திருத்த மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கான தேதியை நாடாளுமன்ற கூட்டுக்குழு வெளியிடும் என்று குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் நடைமுறைகளில் இஸ்லாமிய மக்கள் மட்டுமின்றி அனைத்துத்தரப்பினரும் பங்கேற்று தங்களது ஆலோசனைகளை தெரிவிக்கலாம் என்று அவர் கூறியுள்ளார்.

இந்த சட்டத்திருத்த மசோதா இஸ்லாமிய மக்களின் நலன்களை கருத்தில்கொண்டே வடிவமைக்கப்பட்டுள்ளதாக திரு கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

வைர இறக்குமதி உரிமம் தொடர்பான நடைமுறைகளை மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் அறிவித்துள்ளார்.

மும்பையின் Goregaon-ல் நடைபெற்ற சர்வதேச தங்க நகை கண்காட்சியில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

வைர இறக்குமதிக்கான உரிமம் இத்துறையில் ஈடுபட்டுள்ள குறு-சிறு, நடுத்தர ஏற்றுமதியாளர்களுக்கு பெரிதும் பயனுள்ளதாக இருக்கும் என்று அவர் கூறினார்.

கடந்த மூன்றாண்டுகளில் சராசரியாக ஐந்து சதவீதத்திற்கும் கூடுதலாக ஏற்றுமதி செய்துள்ள தங்க நகை விற்பனையாளர்களுக்கு இந்த உரிமம் பொருந்தும் என்று அவர் குறிப்பிட்டார்.

மத்திய பட்ஜெட்டில், தங்கம், வெள்ளி, பிளாட்டினம் ஆகியவற்றுக்கான இறக்குமதி தீர்வை குறைக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ள திரு பியூஷ் கோயல், இத்தகைய நடவடிக்கைகள் அதிக முதலீடுகளை ஈர்க்க வழிவகுக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<<<>>>>>

ஓய்வூதியதாரர்கள் டிஜிட்டல் முறையிலான ஆயுள் சான்று வழங்குவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை மத்திய ஓய்வூதியத்துறை வெளியிட்டுள்ளது.

இதுகுறித்த விழிப்புணர்வை உருவாக்கும் வகையில், நாடு முழுவதிலும் உள்ள 800 நகரங்கள் மற்றும் மாவட்டங்களில் பிரச்சார நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் வரும் நவம்பர் ஒன்றாம் தேதி தொடங்கி, 30-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளதாக மத்திய பணியாளர் மற்றும் பொது நிர்வாக அமைச்சகம் அறிவித்துள்ளது.

இதன்படி, ஓய்வூதியம் வழங்கும் வங்கிகள் இந்த விழிப்புணர்வு பிரச்சாரத்திற்கான திட்டங்களை வகுத்து இதற்கான பிரத்யேக இணையதளத்தில் வெளியிட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களை உடனடியாக விடுவிக்க மத்திய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கருக்கு அவர் கடிதம் எழுதியுள்ளார்.

நேற்று முன்தினம் ராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த 35 மீனவர்கள் நாட்டுப்படகுகளில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள சம்பவம் தமக்கு மிகுந்த மனவேதனையை அளிப்பதாக உள்ளது என்று அதில் குறிப்பிட்டுள்ளார்.

இதுபோன்ற கைது நடவடிக்கைகள் மீனவ குடும்பங்களின் நம்பிக்கையை குலைப்பதுடன், நிதிச்சுமையையும் ஏற்படுத்தி மீன்பிடி தொழிலை கடினமாக்கியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மீனவ சமுதாயத்தினரின் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளித்து, கைது செய்யப்பட்ட அனைத்து மீனவர்கள் மற்றும் அவர்களது மீன்பிடி படகுகளையும் விடுவித்து தாயகம் அழைத்து வருவதை உறுதி செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இத்தகைய கைது நடவடிக்கைகள் மீண்டும் நிகழாமல் தடுக்கும் வகையில் நிரந்தர தீர்வுகாண வலுவான தூதரக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் என்று முதலமைச்சர் தமது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>

ஏழை மக்களுக்கு வீட்டு வசதி ஏற்படுத்தித்தர வேண்டும் என்ற நோக்கில், மூன்றரை லட்சம் ரூபாய் மதிப்பில் வீடுகட்டும் திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்தி வருவதாக மாநில வனத்துறை அமைச்சர் திரு மதிவேந்தன் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், ஆறாயிரத்து 40 பயனாளிகளுக்கு 211 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வீடுகள் கட்டுவதற்கான ஆணைகள் வழங்கப்பட உள்ளதாக கூறினார்.

நேரடியாக கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, தகுதியுள்ள நபர்கள் அனைவருக்கும் வீடுகட்டுவதற்கான ஆணைகள் வழங்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

கல்விக்கு முக்கியத்துவம் அளித்து அரசுப்பள்ளி மாணவ, மாணவியர்கள் உயர்கல்வி பயில ஏதுவாக, செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்களை அவர் பட்டியலிட்டார்.

மாநில அரசு செயல்படுத்திவரும் திட்டங்களை பயன்படுத்திக்கொண்டு மக்கள் தங்கள் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>

கீழ்பவானி பாசன வாய்க்காலில் மேற்கொள்ளப்பட்டுவரும் சீரமைப்புப்பணிகள் வரும் 15-ஆம் தேதிக்குள் முடிக்கப்பட்டு தண்ணீர் திறக்கப்படும் என்று மாநில வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு முத்துசாமி தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அத்திக்கடவு - அவிநாசி திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டபின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

பணிகள் நிறைவுற்று பாசன வசதிக்காக திறக்கப்படும் தண்ணீர் பற்றாக்குறையின்றி தொடர்ந்து வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் கூறினார்.

ஆன் லைன் மூலம் கட்டிட வரைபட அனுமதி வழங்கும் திட்டம் மக்களிடம் நல்ல வரவேற்பை பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆறு கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய நூலுகம் கட்டும் பணிகள் குறித்தும் ஆலோசனை நடத்தப்பட்டதாக திரு முத்துசாமி கூறினார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் ஜிஎஸ்டி வரிவசூல் 11 சதவீதம் குறைந்துள்ளதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்டம் சேனாதிபாளையத்தில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்டபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் தொழில் வளத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளில் தமிழக அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

வலிமையான தமிழகத்தை உருவாக்குவதை இலக்காக கொண்டு பிஜேபி செயல்பட்டு வருவதாக அவர் கூறினார்.

அத்திக்கடவு - அவிநாசி திட்டத்தின் திறப்பு விழா தேதியை அறிவிக்கும்பட்சத்தில் போராட்டத்தை கைவிடுவது குறித்து பரிசீலிக்கப்படும் என்று திரு அண்ணாமலை தெரிவித்தார்.

<<<<<<>>>>>

*இருவரிச் செய்திகள்*

ரஷ்யா - யுக்ரைன் எல்லைப்பகுதியில் ஊடுருவலை தடுக்கும் வகையில் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை ரஷ்யா மேற்கொண்டுள்ளது.

------------------

வெளியுறவுத்துறை செயலர் திரு விக்ரம் மிஸ்ரி இரண்டு நாள் அரசுமுறைப்பயணமாக இன்று நேபாளம் புறப்பட்டு செல்கிறார்.

-----------------

முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் கே நட்வர்சிங் நேற்றிரவு காலமானார். அவருக்கு வயது 93.

------------

காஷ்மீரின் பாரம்பரியத்தை எடுத்துரைக்கும் வகையில் பள்ளி, கல்லூரி மாணவர்கள் பங்கேற்ற மாபெரும் கலைநிகழ்ச்சி காஷ்மீர் பள்ளத்தாக்குப்பகுதியில் நடைபெற்றது.

---------------------

ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு பொறுப்பேற்று கர்நாடக மாநில முதலமைச்சர் திரு சித்தராமையா பதவி விலக வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி வலியுறுத்தியுள்ளார்.

------------------

உளுந்தூர்பேட்டை அருகே வெள்ளையூர் கிராமத்தில் புதிதாக கட்டப்பட்ட நூலகத்தை சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் திரு ஆனந்த் வெங்கடேசன், திரு சௌந்தர் ஆகியோர் திறந்துவைத்தனர்.

-------------

பெரம்பலூர் மாவட்ட காவல்துறை சார்பில் ஆயுதப்படை வளாகத்தில உடல் உறுப்புதான முகாம் நேற்று நடைபெற்றது.

-----------

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூரில் பள்ளி மேலாண்மைக்குழு மறு கட்டமைப்பு நிகழ்ச்சி ஆட்சியர் திரு தர்பகராஜ் தலைமையில நேற்று நடைபெற்றது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பாரிஸில் நடைபெற்றுவரும் ஒலிம்பிக் விளையாட்டுப்போட்டிகள் இன்றுடன் நிறைவடைகின்றன

இன்று நடைபெறும் நிறைவுநாள் விழாவில் வண்ணமிகு கலைநிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன.

---------

நேற்று நடைபெற்ற மகளிர் மல்யுத்த போட்டியின் 76 கிலோ எடைப்பிரிவு காலிறுதியில் இந்தியாவின் ரித்திகா ஹூடா தோல்வியடைந்தார்.

கோல்ஃப் போட்டியில் இந்தியாவின் அதிதி அசோக், திக்ஷா தாஹர் ஆகியோர் பதக்கம் வெல்லும் வாய்ப்பை இழந்தனர்.

மகளிர் 50 கிலோ எடைப்பிரிவு மல்யுத்த இறுதிப்போட்டியில் தகுதி நீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்து, இந்திய வீராங்கனை வினேஷ் போகத் தாக்கல் செய்த மனுமீதான தீர்ப்பு வரும் 13-ஆம் தேதி வழங்கப்படும் என்று சர்வதேச விளையாட்டு நடுவர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

--------------

ஜெர்மனியில் நடைபெற்ற சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில், ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் - விஜய் சுந்தர் பிரசாந்த் இணை தோல்வியடைந்தது.

<<<<<<END>>>>>